திருக்கிறதா? அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறார்களா அல்லது எடுக்க உத்தேசம் உண்டா என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. விவசாயிகளே அப்படிப்பட்ட இடங்களில் புகையிலை சாகுபடியில் ஈடுபடலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நீர் ஓட்டத்தைக் கண்டுபிடிக்க என்ன ஏற்பாடு செய்யப் படுகிறது? அதைச் சர்க்காரே ஏற்று நடத்துமா?

கனம் திரு. பூ. கக்கன் : நீர் ஓட்டத்தைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றிச் சொல்லலாம். இப்பொழுது 'ட்யூப் வெல்ஸ்' போட்டு தண்ணீர் எடுத்து, விவசாயம் செய்ய உதவிசெய்ய இதெல்லாம் செய்யப் படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், ஜில்லா முழுவதும் உப்புத் தண்ணீராக இருக்கிறது என்று சொல்லவில்லை. திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களில், ஒரு சில பிராந்தியங் களில் அப்படி இருந்து விவசாயிகள் நஷ்டப்படுகிறார்கள். அதற்கு மாற்றாக வேறு மானியம் கொடுத்து, வேறு இடத்தில் கிணறு வெட்ட வசதி செய்துகொடுக்க உத்தேசிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : 'வேறு மானியம்' என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது கிணறுவெட்ட கடன் கொடுக்கிறோம். வேறு இடத்தில் கிணறு வெட்டினால் அதற்கும் கடன் வாங்கிக்கொள்ளலாம்.

கனம் சபாநாயகர் : அதல்ல அவர் கேள்வி. 'வெட்டிய கிணறு உப்புத் தண்ணீராகப் போனால், கொடுத்த கடனை வஜா செய்து விடுவார்களா?' என்று கேட்கிறார். அதைத்தான் அப்படிச் சுற்றி வளைத்துக் கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிச் செய்வதற்கில்லை.

Cracker explosion in Perambalur bus-stand

*21 *Q.*—SRI V. SANKARAN : } Will the Hon. the Minister
SRI S. MANI : }
for Home be pleased to state—

(*a*) whether it is a fact that a cracker explosion occurred in the bus stand of Perambalur in Tiruchirappalli district recently; and

(*b*) if so, the reasons therefor and the extent of damages caused thereby ?

31st January 1966]

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) It is reported that the explosion occurred due to the careless unloading of certain bags containing crackers at the Perambalur Bus stand.

As a result of the explosion two persons died and 21 persons sustained injuries. The damages caused to the Mangalore tiled roofing and to a side wall of the Bus stand are estimated to be **Rs. 400.**

திரு. வை. சங்கரன் : தலைவர் அவர்களே, அம்மாதிரி பொதுக் காரியர்கள், பஸ்கள், இவற்றில் வெடி மருந்துகளை ஏற்றிச் செல்வது அபாயகரமானது என்று விதி இருக்கிறதே. அப்படி யிருக்கும் போது இந்த விபத்துக்கு யார் பொறுப்பு என்று கண்டு பிடிக்கப் பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலே இந்த வெங்காய வெடியை யெல்லாம் கொண்டு வந்து பஸ்ஸிலே ஏற்றவந்த சகோதரர் அதை வெங்காயம் என்று சொல்லி, இந்த வெடியை எல்லாம் ஏற்றி இருக் கிறார். அதன் பிறகு வழியில் மழை வேறு பெய்தது A case in Perambalur Crime No. 332 of 1965 under Section 5 (3) (a) (b) of the Indian Explosives Act, has been registered and the same is under investigation by the Inspector of Police, Perambalur.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நடந்த விபத்து போலீசாரின் புலன் விசாரணையில் இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். விபத்து எப்போது நடைபெற்றது ? வழக்குத் தொடங்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விபத்து நடந்தது 14-10-1965 அன்று. பெரம்பலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்கிறார் என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. சா. கணேசன் : இந்த மாதிரி புலன் விசாரணையில் இருக்கிறது இந்த விவகாரம் என்றால், யார் மீது குற்றம் சாட்டப் பட்டது ? அல்லது சாட்டப் படுவதாக இருக்கிறது? யார் இந்த 'வெங்காய மூட்டையைக்' கொண்டு வந்து ஏற்றினார் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : யார் இந்த வெங்காய வெடியை வெங்காயம் என்று சொல்லி ஏற்றினார் என்றால், அப்துல் காதர் என்ற ஒரு வியாபாரி. (திரு. சா. கணேசன் : எந்த ஊர் ?) நாராயணமங்கலம் என்கிற ஊர், பாடலூர் போலீஸ் ஸ்டேஷன் பின்னால் அவரே போலீசில் சரண் அடைந்துவிட்டார்.

Damage caused by cyclone and heavy rains

* 22 Q.—SRI V. SANKARAN : SRI A. DURAIYARASAN : } Will the Hon. the Minister for Food be pleased to state :—

(a) the extent of damage to person and property, caused by cyclonic storm, heavy rains and tidal waves on 23rd and 24th December 1964, in the various districts of Tamil Nad; and